செ.வெ.எண்.173 நாள்.23.02.2010.

## பத்திரிக்கைச் செய்தி
## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை

திருவாளர்கள் ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெடிக்கல்ஸ், எண். 60, ஜெயின் ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14 மன மயக்கம் தரும் மற்றும் போதை மருந்துகளை மருத்துவரின் பரிந்துரையின்றி மருந்து உரிமத்தை தவறாக உபயோகித்து பொது மக்களுக்கு விற்பனை செய்து வரும் செய்தி அறிந்து மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அவர்கள் புலனாய்வுப் பிரிவு மருந்தாய்வாளரை அம்மருந்துக் கடையை ஆய்வு செய்ய உத்தரவிட்டார். அவ்வுத்தரவின் பேரில் மருந்தாய்வாளர் அவர்கள் 19.8.2009 அன்று அந்த மருந்து கடையை ஆய்வு செய்தார். மருந்து ஆய்வாளரின் புலனாய்வு அறிக்கையின் பேரில் அந்நிறுவன உரிமையாளருக்கு உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், மண்டலம்–3, சென்னை அவர்களால் விளக்கம் கேட்கும் பொறுப்பாணை 2.11.2009 வழங்கப்பட்டது. அந்நிறுவனத்தின் உரிமையாளரால் 17.11.2009 அன்று விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்விளக்கவுரையை நன்கு பரிசீலனை செய்த பின்பு உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர், மண்டலம் –3, சென்னை–6 அவர்களால் அந்நிறுவனத்தின் மருந்து உரிமம் படிவம் 20 மற்றும் 21 ரத்து செய்யப்பட்டது.

வி.கு. சுப்புராஜ்,
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9